IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# பெரியாழ்வார் பாடல்களில் குழந்தை வளர்ப்பு

முனைவர் பா. முத்துச்சாமி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-600 030.

ஸ்ரீவில்லிபுத்தூரில் கலி 47 குரோதன ஆண்டு ஆனித் திங்கள் சுக்கில ஏகாதசி ஞாயிற்றுக்கிழமை சுவாதி நட்சத்திரத்தில் முகந்த பட்டர் என்பவருக்கும் பதுமையார் என்ற பத்மவல்லி அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வராய்த் தோன்றியவரே பெரியாழ்வார் என்று மூவாயிரப்படி குருபரம்பரைப் பிரபாவம் கூறுகிறது. வடிவழகிய நம்பிதாசர் இயற்றிய பெரியாழ்வார் பிரபந்தத்தில் 'ஆனியெனும் திங்களினில் வளர்பிறையில் அருஞ்சோதி மேனியனார் சோதியினில் 'அவதரித்தார் என்று கூறுகிறார். ஆராய்ச்சியாளர்கள் இவ்வாழ்வார் காலம் கி.பி. எட்டாவது நூற்றாண்டாய் இருக்கலாம் என்று கருகின்றனர்.

பெரியாழ்வார்க்குத் தாய் தந்தையர் இட்ட திருப்பெயர் விஷ்ணுசித்தர் என்பதாகும். தமது பாசுரங்களில் புதுவைக் கோன்பட்டர்பிரான், வேயர் புகழ்விட்டு சித்தன், வில்லிபுத்தூர்ப்பட்டன், வில்லிபுத்தூர் விட்டு சித்தன், பட்டர்பிரான் என்று கூறிக் கொள்கிறார். பெரியாழ்வார் பாடிய பாடல்களில் இருந்துதான் நாலாயிர திவ்யப் பிரபந்தம் முறை வைப்பு தொடங்குகிறது. அதன்படி பெரியாழ்வார் பாடியுள்ள 373 பாசுரங்கள் அனைத்தும் பெரியாழ்வார் திருமொழி என்று பெயரிடப்பட்டுள்ளது. கண்ணன் திருஅவதாரச் சிறப்பு, திருப்பாதாதி கேசவர்ணனை, பிள்ளைப் பருவங்கள், புறம்புல்கல், பூச்சி காட்டுதல், காதுகுத்தல், நீராட்டல், பூச்சூடல், காப்பிடல் முதலியவற்றைப் பாடியிருப்பது மிகவும் மகிழ்ந்து அனுபவிக்கத் தக்கது. பக்திக் காதலைத் தாயன்பாகப் பாடிய தனிப்பெருமை பெரியாழ்வார்க்கே உரியது. தாமே யசோதையாகிப் பாடியிருக்கும் பாசுரங்கள் நம்மை பரவசப்படுத்துகின்றன.

பெரியாழ்வார் கண்ணன் மீது அளவு கடந்த பக்தி வைத்து இருந்தார். பல இடங்களில் பெரியாழ்வார் தனது தாயுள்ளத்தை பாடல்களில் வெளிப்படுத்தி உள்ளார். யசோதை கண்ணனைப் பராமரிப்பதாகப் பாடல் அடிகள் இடம் பெற்றாலும் அப்பாடல்களின் வழியாகப் பெரியாழ்வாரின் தாயுள்ளத்தை காணமுடிகிறது. பெரியாழ்வாரின் தாயன்பு பிரமிக்க வைக்கிறது. பெரியாழ்வார் கண்ணன் பிறப்பு முதல் அவன் படிப்படியாக வளரும் நிலைவரை தன் பாடல்களில் நிறமுறப்பாடுகிறார். கண்ணன் மீது தாயன்பைச் சொரிந்து அவனைக் குழந்தையாகக் கண்டு விளையாடல்களை ஆசைதீர அனுபவிக்கிறார் பெரியாழ்வார். ஒரே இரவில் ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் வளரும் கண்ணனைப் பெரியாழ்வார் காண்கிறார். தேவகி வருந்தத் தாமே யசோதையாகிக் குதூகலமடைகிறார். 'கடவுளின் பேரழகிற்கு இவ்வுலகிலே என்ன தீங்கு நேர்ந்து விடுமோ' என்று பொங்கிய பரிவுடன் காப்பிட்டுப் பல்லாண்டு பாடியவர், அந்தத் தெய்வ அழகைக் குழந்தையாக்கித் தாயின் பேரின்பத்தை அனுபவிக்கிறார். இவர் திருமொழியிலுள்ள பாடல்களில் பாதிக்கு மேல் கிருஷ்ண லீலைகளைக் கூறுவனவேயாகும்.

சோலைமலையிலும் திருக்கோட்டியூரிலும் தாம் கண்ட குழந்தைக் கண்ணனை நெஞ்சிலே அனைத்துக் கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வந்துவிட்டார். தமது நந்தவனத்திற்கு இவ்வூரும் நமது தோட்டமும் ஆய்ப்பாடியாகத் தாம் யசோதையாகி வளர்ந்துவரும் குழந்தையின் மேனியழகை, 'கண்ணெச்சில் பட்டுவிடுமோ? என்ற அச்சமின்றி அயலகத்துப் பெண்களைக் கூவியழைத்துக் காட்டுகிறார்.

குழந்தை கண்ணனின் அழகைத் தனித்தனியே பாராட்டி காட்டுகிறார். 'பத்துக் கால்விரல்களும் ஒன்றுக்கொன்று பொருத்தமாய் அமைந்து அடிமலர்களை அழகு செய்கின்றன என்று சொல்லி ஒன்பது விரல்களுக்கு நவரத்தின வர்ணங்களும், மற்றொரு விரலுக்குப் பொன்னிறமுமாக 'மருதாணி' இடுவதுபோல செம்பஞ்சை இட்டுக்காட்டுகிறார்.

"வாருங்கள் பெண்களே! என் மணிவண்ணனுடைய பாதவிரல்கள் நவரத்தினங்களையும் மாற்றுயர்ந்த பொன்னையும் தத்திப் பதித்து வைத்தாற் போலச் சேர்ந்து எவ்வளவு அழகாயிருக்கின்றன. பாருங்கள்!' என்கிறார். கணைக்கால், முடிந்தாள், தொடை, வயிறு, மார்பு முதலான அவயவங்களையும் காட்டுகிறாள் யசோதை. ஊர்ச் சிறுவர்களைக் காட்டிலும் தன் குழந்தை அழகு வாய்ந்ததென்று பெருமைப்படுகிறது பெரியாழ்வாரின் தாயுள்ளம்.

நீராட்டல்

பொதுவாகக் கிராமங்களில் குழந்தையைக் குளிக்க வைப்பதற்காகப் பெரிய பாத்திரத்தில் நீரைக் காய்ச்சிப் பின் அதில் துளசி, வேம்பு, நெல்லி, நொச்சி, திருநீற்றுப்பச்சிலை போன்ற மருத்துவக் குணம் இட்டுக்கை வெதும்ப இருக்கும் அளவிற்கு அந்நீரை ஆற வைப்பர். பின் குழந்தையை அந்நீரில் குளிக்க வைப்பர். இப்பழக்கத்தை "காய்ச்சின நீரோடு நெல்லி கடாரத்திற் பூரித்து வைத்தேன்" **(154)** என்ற அடிகளில் குறிப்பிடுகிறார். அதாவது நான் உனக்குக் காய்ச்சின வெந்நீரில் நெல்லி இலைகளை இட்டுக் குளிக்கத் தயாராய் வைத்துள்ளேன். நீராட வாராய் என யசோதை வாயிலாகக் கண்ணனைப் பெரியாழ்வார் அழைக்கிறார். குழந்தையின் கை, கால்களை நிமிர்த்துவிட்டு, நீரை மெல்ல ஊற்றி நீராட்டுகிறாள். நீராட்டும் போதே குழந்தையின் நாக்கை வழிக்கிறாள். இதனைக்

கையுங்காலும் நிமிர்த்துக் கடாரநீர்
பையவாட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்
ஐய நாவழித்தாளுக்கு அங்காந்திட **(1-6)**

என்னும் அடி புலப்படுத்துகின்றன.

பெண்களே அதனைக் காண வாரீர் என யசோதை அழைப்பதாக பெரியாழ்வார் காட்டுகிறார். கண்ணனின் திறம்பட்ட மழலைப் பேச்சிற்கும் வாயழகிற்கும் நுணுக்கிய மஞ்சளிட்டு நாக்கு வழிப்பதே காரணம் என பெரியாழ்வார் கூறுகிறார். இங்கு கண்ணனின் சிறப்பினைப் பாடுவதே பெரியாழ்வாரின் நோக்கமாக இருந்தாலும் குழந்தை பராமரிப்பின் செய்திகளும் ஆங்காங்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொட்டிலிடல்:

குழந்தையைத் தொட்டிலிடும் செயலைப் பெரியாழ்வாh நயமுறப்பாடுகிறார். குழந்தையைத் தாய்மார்கள் உறங்க வைப்பதற்காகத் தொட்டிலில் இடுவர். பிள்ளைகளோ சில போது உறங்குவர். சில போது உறங்கார். தொட்டிலில் இருந்து வெளியே எடுத்து இடுப்பில் உட்கார வைத்தாலும் அதற்கும் ஒப்பமாட்டார்கள். இப்படிப் பலமுறை செய்வதால் தாயார் களைப்படைவார். பெண்களுக்கு இருக்கக்கூடிய அனுபவத்தை பெரியாழ்வார் எங்கு கண்டு. எப்படி உணர்ந்தாரோ என்று தெரியவில்லை. ஆனால் தொட்டிலிடல் நிகழ்ச்சியை பற்றி பெரியாழ்வார் பின்வரும் பாடலாக வடித்திருப்பதில் ஒரு தாய் முழுமையாகக் காட்சி தருகிறாள்.

கிடக்கில் தொட்டிய கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை இறுத்திடும்
ஒடுக்கிப் புல்லில் உதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கிலாமையால் மெலிந்தேன் நங்காய்

என்பது பெரியாழ்வாராம் தாயின் கூற்று.

தாலாட்டல்:

"தாலாட்டு என்பது தாய்தன் குழந்தை உறங்குவதற்காக தன் நாவை அசைத்து இசையோடு பாடும் பாட்டு தாலாட்டு" என்பதாகும். தாலாட்டுப் பாடும் தாய்மார்கள் முதலில் தம் நாவினை அசைத்து ஒரு வகையான ஒலியினை எழுப்புவர். பின்னர் சொற்களைச் சேர்த்துப் பாடுவர். தாலாட்டுப் பாடும் மரபு பழங்காலந்தொட்டே வழிவழியாக வந்து கொண்டிருக்கிறது. உறக்க உணர்வை உயிரிடையே கலக்கிவிடும் ஆற்றல் தாலாட்டில் பொதிந்து உள்ளது. தாயையும், சேயையும் இணைக்கும் அன்புக்கயிறு தான் தாலாட்டாகும்.

பெரியாழ்வார் தாய் தன் மகனைத் தாலாட்டும் தனிச்சிறப்பு வேறெந்த இலக்கியத்திலும் இல்லாதது. காலப்போக்கில் பல இலக்கியங்களுக்கு அதுவே அடிகோலியது. தன் மகன் கண்ணனுக்குப் பிரமன் தொட்டிலையும், ஈசன் பெரும் பரிசையும், இந்திரன் கிண்கிணியும், அமரர்கள் அரைத் தொடரையும். வருணை முத்தாரத்தையும், திருமங்கைவாசக் கண்ணியையும், பூமகள் பொற்பூவினையும் பரிசுகளாகக் கொண்டு வந்ததாகப் பாடி பூரிக்கிறாள். இத்தாய் 'மாணிக்குறளனே தாலேலோ' என்றும், 'அரங்கத் தணையானே தாலேலோ' என்றும் பலவாறு தன் புதல்வனின் சிறப்பைப் பாராட்டி பாடுகிறாள். இத்தாய், மேலும் தொட்டிலில் இடப்பட்டவுடன் குழந்தை அழுவதையும், அதனால் அழேல் என்று பின்முறை கூறியும் தாலாட்டுவதைக் காணமுடிகிறது. பெரியாழ்வாரின் தாலாட்டுப் பாடல்களில் தாய்மையின் நிறைவு தெரிகிறது. பிள்ளையை உறங்க வைக்க முனையும் தாயின் அனுபவம் தெரிகிறது.

குழந்தை வளர்ப்பு:

குழந்தை வளர்ப்பில் பல்வேறு பருவங்கள் உள்ளன. பெரியாழ்வாரும் குழந்தை வளர்ப்பில் உள்ள பல பருவங்களை பற்றி பாடியுள்ளார். பெரியாழ்வாராகிய தாய் அம்புலியைத் தன் மகனுக்காக அழைக்கிறாள். இளமாமதி நின் முகம் கண் உளவாகில் நீ இங்கே நோக்கிப்போ என்று அழைக்கிறாள். சிறியன் என்றும், பாலகன் என்றும், தன் பிள்ளையை எண்ணவேண்டாம் என அவள் உரைக்கும் போது தன் மகனைப் பற்றி அவளுக்கிருக்கும் பெருமை தெரிகிறது. ஆழ்வார், அம்புலி ஆட்டத்தைத் தொடர்ந்து செங்கீரை, சப்பாணி, தளர்நடை நடத்தல் போன்ற பல நிலைகளைத் தன் பாடல்களில் வருணிக்கிறார். எனக் கொருகால் ஆடுக செங்கீரை என்றும், ஆடுக, ஆடுகவே என்றும் அவர் பாடியுள்ள பாடல்கள் நினைந்து மகிழத்தக்கன. அது மட்டுமின்றிக் குழந்தை கைகொட்டி

விளையாடும் சப்பாணிப் பருவமும் இவர் பாடல்களில் பொலிவுடன் பாடப்பட்டுள்ளது. சரந்தொட்ட கைகளாலும், இரணியன் மார்வகலம் பிளந்திட்ட கைகளாலும் சப்பாணி கொட்டியருள வேண்டுகிறார். மேலும் சாரங்கபாணி வாசுதேவன் இருடீகேசன் தளர்நடை நடவானோ என்று ஏங்குகிறார்.

கன்னற்குடம் திறந்தாலொத்தூறிக் கண கண சிரித்து வந்து
முன் வந்து நின்று முத்தந்தரும் என் முகில் வண்ணன் திருமார்வன்
தன்னைப் பெற்றேற்குத் தன் வாயமுதம் தந்து
என்னைத் தளிர்ப்பிக்கின்றான் **(7-4)**

என்று விடத்துத் தாயாம் பெரியாழ்வார் பிள்ளையின் வாய்முத்தப் பெருமையை விவரிப்பதை உணரலாம். தளர்நடை நடக்கத் தூண்டும் இத்தாய், "புகழ்ப் பல தேவனென்னும் தன் நம்பியோடப் பின் கூடச் செல்வான்" (7-5) என்று பாடுகையில் தாய்மையின் எல்லைக்கே சென்று விடுகிறாள். தன் பிள்ளைகள் இருவரும் இணைந்து விளையாட வேண்டும் என்று ஆவலுறும் அவள் தாயுள்ளம் தனிச் சிறப்புடையது. இதையொத்துத் தன் மகனை அனைத்துக் கொள்ள அழைக்கும் முறையும், முதுகில் கட்டிக் கொள்ளும்படி அழைத்தாலும், அப்பூச்சு காட்டும் விளையாட்டும் ஒரு தாய் பிள்ளையைப் பாராட்டிச் சீராட்டி வளர்க்கும் முறைக்கு தக்க சான்று பகர்கின்றன.

பாலூட்டல்:

பால் நினைந்தூட்டுபவள் தாய் என்பது யாவரும் அறிந்ததே. தாயின் அந்தக் கடமையைத் தாய் போல் உணர்வதாலேயே தாயாகிறார் பெரியாழ்வார். அம்மமுண்ணத் துயிலெழாய் என்று பால் குடிக்கக் குழந்தை எழுப்புகிறார். இரவுப் பொழுதிலும் நீ உண்ணவில்லை என்பதில் தாயன்பு மீதூறிச் சிறக்கிறது. இப்பாசுரத்தில் தாய் என்ற சொல்லை பன்முறை எடுத்துரைக்கிறார். தாயர்வாய்ச்சொல் கருமங்கண்டாய் என்று தாய் சொல்லைத் தட்டக் கூடாது என அறிவுறுத்தும் அவர், தத்தம் மக்கள் அழுது சென்றால் தாய்மாராவார் தரிக்ககில்லார் என்றும் பாடுகின்றார். ஆழ்வார் தன் தாயுறவை நிலை நாட்டும் இடங்களாக இவை விளங்குகின்றன. அஃதன்றி நீ முலையுணாயே என்று தன் குழந்தையைப் பாலுண்ணப் பலமுறை அழைக்கும் ஆழ்வார்.

ஒரு முலையை வாய் மடுத்து ஒரு முலையை நெருடிக்கொண்டு
இரு முலையும் முறை முறையா ஏங்கியேங்கி இருந்துணாயே **(2-8)**

என்று பாடுகையில் முழுமையும் தாயாகவே, பெண்ணாகவே மாறிவிடுகிறார் என்றுணரலாம்.

பிழை மறுத்தல்:

தாய் தன் குழந்தைகளைப் பிறர்குறை கூறப்பொறார். பெரியாழ்வார் பாடல்களிலும் யசோதையாகிய தாய் தன் மகன் கண்ணனை ஆய்ச்சியர் குறை கூறுவதைப் பொறுக்க மறுக்கிறாள்.

'அம்மா, உன் மகன் எங்கள் வீட்டுக்கு வந்தான்; வெண்ணெயை விழுங்கினான்; வெறுங்கலத்தைக் கீழே போட்டான். தரையிலே போடவில்லை, கல்லிலே!' என்கிறாள் ஆய்ச்சி ஒருத்தி. அந்த ஓசையில் ஒரு மகிழ்ச்சி, 'இது கண்ணன் கற்ற கல்வி!' என்கிறாள்.

வேறொரு ஆய்ச்சி வருகிறாள்; உருக்க வைத்திருந்த வெண்ணெயைத் தாழியோடு எடுத்துச் சாப்பிட்டு விட்டுத் தாழியையும் உடைத்துவிட்டான். பிறகு ஒன்றும் அறியாதவன் போல் என் பக்கத்திலே வந்து நிற்கிறான் அம்மா!'என்கிறாள்.

இன்னொரு ஆய்ச்சி ஓடி வருகிறாள்! பாலைக் காய்ச்சி அடுப்பில் ஏற்றி வைத்தேன்; என் மகளைக் காவலாக வைத்து விட்டு மேலண்டை வீட்டுக்கு நெருப்பு எடுத்து வரப்போனேன். அங்கே கொஞ்சம் பேசிக்கொண்டு நின்று விட்டேன். அம்மா; அதற்குள்ளே உன் மகன் அந்தப் பாலைச் சாய்த்துப் பருகிவிட்டான். நான் இங்கே வரும் போது கூட அங்கேதான் நின்று கொண்டிருந்தான் யசோதைப் பிராட்டியே! உன் மகனைக் கூப்பிடு' என்கிறாள்.

இன்னும் ஒருத்தி வந்து, நோன்புக்குச் சித்தம் செய்து வைத்திருந்த பட்சணங்களைத் தேவ பூஜைக்கு முன்னமே கண்ணன் விழுங்க விட்டதாகப் புகார் செய்கிறாள். ஆனால் யசோதைப் பெண்ணோ அதைக் காதில் வாங்காமல் அரியவன் இவன் எனக்கு என்றும், வருக. வருக வாமன நம்பி வருக என்றழைத்தும், ஏதேனும் சொல்லி அசலத்ததார் ஏதேனும் பேச நான் கேட்கமாட்டேன் என்றும், மறைமுகமாகத் தன் கருத்தைத் தெரிவித்துத் தன்

மகனை அழைக்கிறாள். அது மட்டுமின்றி,
தூசனஞ் சொல்லும் தொழுத்தைமாரும்
தொண்டரும் நின்றவிடத்தில் நின்று
தாய் சொல்லிக்கொள்வது தன்மங் கண்டாய்
தாமோதரா இங்கே போதராயே **(7-8)**

என்று தன் மகனுக்காகப் பரிந்து எழும் பாசஉணர்வு பெரியாழ்வாரின் தாய்மைப் பண்பிற்கு எல்லையைக் காட்டுகிறது.

அந்திக் காப்பிடல்:

அந்திக் காப்பிடல் என்பது கிராமப் புறங்களில் கண்ணேறு கழித்தல் பெயரிலும் திட்டி (திருஷ்டி) சுத்துதல் என்ற பெயரிலும் வழங்கப்படுகிறது. குழந்தையை இரவு தூங்கச் செய்யும் முன் குழந்தையின் முன்னால் வேப்பெண்ணெய் விளக்கேற்றி வைத்து, பஞ்சுத்திரி ஒற்றைப் படை எண்களில் அதாவது 5, 7, 9 என்ற ஏதாவது ஒரு எண்ணிக்கையில் தோய்த்து ஒவ்வொரு திரியாக தாய் பிடித்து விளக்கில் பற்ற வைத்து அதற்கென்றே சொல்லப்படும் மந்திரம் போன்ற பாடலைப் பாடிக் கொண்டு குழந்தையின் முகத்திற்கு நேரே பிடித்து வெப்பம் தாக்காத தூரத்தில் வைத்துக் காட்டிவிட்டுத் திரியால் குழந்தையின் தலையை மும்முறை சுற்றி நீர் நிறைந்த குவளையில் பட்டென்று போட்டுவிடுவர். அப்போது திரி கருகி வேப்பெண்ணெய் மணத்தோடு சேர்ந்து ஒருவகை புகை மணம் வீசும். திரிப்புகையானது மருத்துவ ரீதியிலும் குழந்தைக்கு உடல் நலனைத் தரும் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய நுணுக்கமான காப்பிடல் செய்தியைப் பெரியாழ்வார் தம்முடைய பாடல்களில் எடுத்தாண்டுள்ளார்.

'உருகாட்டும் அந்தி விளக்கு இன்று ஒளி கொள்ள ஏற்றுகேன் வாராய்'

என்கிறார் பெரியாழ்வார்.

அந்தி விளக்கு எனப் பெரியாழ்வார் கூறுவது வேப்பெண்ணெய் விளக்கையே குறிப்பதாக இருக்கிறது. இன்னும் சில இடங்களில் காப்பிட வாராய் என்று மட்டுமே கூறிச் செல்கிறார்.

"மன்றில் நில்லேலல், அந்திப்போது நான் உன்னை காப்பிட வாராய்" **(193)**

என்று கூறுகிறார். மேலும் ஒரு பாடலில்

"பள்ளிக்கொள் போது இது ஆகும் என்பதால் பரமேன; காப்பிட வாராய்" **(198)**

என்று யசோதை கண்ணனை அழைக்கும் இடங்களில் எல்லாம் கூறப்படும் காப்பிடுதல் என்பது மேற்கூறிய முறையையே கூறுகிறார் என்று நாம் கொள்ளலாம்.

காது குத்துதல்:

காது குத்துதல் என்பது இன்றளவும் குழந்தைகளுக்கு செய்யப்படும் ஒரு சடங்காகும். அதற்கென்று சில வரையறைகள் உள்ளன என்றாலும் குழந்தையின் நலன் கருதி மூன்றாம் மாதத்திலேயே காதுகுத்துவது என்பது கட்டாயமாகக் கருதப்படுகிறது. பெரியாழ்வார் இத்தகையதொரு மக்கள் வழக்காகிய காது குத்துதலுக்கு முக்கியத்துவம் தந்துள்ளார். காது குத்தல் என்ற தலைப்பில் பல பாசுரங்களைப் பாடியுள்ளார்.

"தலை நிலாப் போதே உன்காதைப் பெருக்காதே
விட்டிட்டேன். குற்றமே அன்றோ?" **(145)**

என்ற வரிகள் மூலம் தலை நிற்காமலிருக்கிற குழவிப் பருவத்திலேயே உன் காதைப் பெருக்காமல் விட்டேன். அப்படி விட்டு வைத்தது எனது குற்றம் என வருந்துகிறார். தலை நிற்காப் பருவம் என்பது மூன்றுமாதக் குழந்தையைத்தான் குறிக்கிறது. அவர் கூறுவது கிராமத்து வழக்கத்தையே தலை நிலாப் போது எனக் கூறுகிறார் என்று கொண்டால் அது மிகையாகாது. மேலும் குழந்தைக்குக் காது குத்தவில்லை என்றால் அக்குழந்தை வளரும் நாட்களில் மிகுந்த குறும்புத்தனம் செய்யும் என்பது நாட்டுப்புற நம்பிக்கையாகும்.

பெரியாழ்வார், "திரியை எரியாமே காதுக்கு இடுவேன்' என்று குழந்தைக்கு சமாதானமும் சொல்கிறார். காது குத்துவது சிறந்தது. அவ்வாறு குத்தும் போது ஏற்படும் வலியைப் போக்குவேன். எரிச்சல் எடுக்காமல் காதுக்குத் திரியை இட்டு பார்த்துக் கொள்வேன் என பெரியாழ்வார் கூறுகிறார்.

முடிவுரை:

பெரியாழ்வார் பாடல்களில் கண்ணனைக் குழந்தையாகப் பாவித்துப் போற்றும் பகுதிகளில் தனது தாய்மையும், குழந்தை பராமரிப்பு முறைகளும் அதிகம் இடம் பெறுகின்றது. பாடல் அடிகள் யசோதை பேசுவதாக அமைந்தாலும் பெரியாழ்வாரின் தாயன்பையும் அக்கறையையும் நாம் உணர முடிகிறது. மருத்துவ நோக்கோடு கூடிய வழக்கங்கள் பலவற்றையும் இவரது பாடல்களில் காணமுடியும்.

பார்வை நூல்கள்:


1. தோ. ந. வீரராகவன், 'ஆழ்வார்கள் வரலாறு', குமரிப் பதிப்பகம், நாகப்பட்டினம், 2013.
2. சுஜாதா, ஆழ்வார்கள் ஓர் எளிய அறிமுகம், விசா பப்ளிகேஷன், சென்னை, (2001).
3. ஜெகாதா, பன்னிரு ஆழ்வார்கள், விசாலாட்சி, நிலையம், சென்னை-14, 2005.
4. பி. ஸ்ரீ. ஆழ்வார்கள் வரலாறு, 1, 2, 3, 4, 5 பாகங்கள் ஜெனரல் பப்ளிஷர், சென்னை (2013).